பாடம் 2

# கல்வாரிக்குப் போகையில்

*சுமக்கமுடியாமல் நீ கஷ்டப்பட்டுச் சுமந்து செல்லும்போது, உன்னிடமிருந்து யாரேனும் அச்சுமையை வாங்கினது உண்டா? அல்லது யாரிடமிருந்தேனும் நீ சுமையை வாங்கிச் சுமந்தது உண்டா?*

பஸ்கா விருந்திற்குப் பிறகு, அன்றைய இரவிலேயே இயேசு தம் சீடர்களுடனே கெத்செமனே தோட்டத்திற்குச் சென்றார். அங்கே இயேசுவைச் சிறைபிடித்துச் சென்றார்கள். பிரதான ஆசாரியனும் யூதத்தலைவர்களும் தேசத்துஅதிபதிகளான ஏரோதும் பிலாத்தும் அநேகக் கேள்விகளை இயேசுவிடம் கேட்டனர். இயேசுவைக் குற்றவாளியாகத் தீர்த்தனர். இயேசுவைச் சிலுவையில் அறையத் தீர்மானித்தனர்.

போர்வீரர்கள் இயேசுவின் தலையில் முள்முடி வைத்துக் கேலிசெய்தார்கள்; இயேசுவின் முகத்தில் துப்பினார்கள்; இகழ்ந்தார்கள்; இயேசுவின் உடலில் இருந்து இரத்தம் வரும் வரையிலும் சவுக்கால் அவரை அடித்து, துன்புறுத்தினார்கள். இயேசு குற்றவாளியாகத்தீர்க்கப்பட்டார். இயேசுவைச் சிலுவையில் அறையத் தீர்மானித்தார்கள்.



பொழுது விடிந்தது. அவர்களுடைய சட்டப்படி குற்றவாளி தான் தன் சிலுவையைச் சுமக்க வேண்டும். எனவே, மிகப்பாரமான சிலுவையை இயேசுவின் தோள்மேல் ஏற்றினார்கள். இரவு முழுவதும் உடல் நையப்பட்ட நிலையில் அந்தச் சிலுவைப் பாரத்தை இயேசுவால் சுமக்க முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடி நடந்தவர் சுமக்கமுடியாமல் குப்புற விழுந்தார்.

ஆப்பிரிக்காவின் சிரேனே ஊரைச் சேர்ந்த சீமோனும் எருசலேமுக்கு வந்திருந்தார். பஸ்காப் பண்டிகை என்பதால் எருசலேமில் கூட்டம் அதிகமாக இருந்தது. ஒரு வேளை சீமோன் ஒரு பெரிய வியாபாரியாகவும் இருந்திருக்கலாம்.

## மனன வசனம்

**ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.**
**கலாத்தியர் 6:2**

போர்வீரர்கள் இயேசுவின் தலையில் முட்கிரீடத்தை வைத்தார்கள். அது அழுத்தியதால் தலையிலிருந்து முகத்தின்மேல் இரத்தம் வழிந்தது. சவுக்கடி யால் சதை பிய்ந்து உடல் முழுக்க இரத்த வெள்ளமாயிருந்தது. பாரச் சிலுவையுடன் நடக்க முடியாமல் கீழே விழுந்தார். மயங்கி விடுவார் போலத் தெரிந்தது. இந்தக் காட்சியை சீமோன் பார்த்தார். இயேசுவை யாரென்று சீமோனுக்குத் தெரியாது. அதனால், 'இந்த மனிதன் மிகவும் மோசமானவன் போலும், அதனால் தான் தண்டனை அதிகக் கொடுமையாக இருக்கிறது' என்று நினைத்தார்.

ஆனால், இயேசுவையும் அவர் செயலையும் பார்த்த போது, சீமோனின் எண்ணம் மாறிற்று. ஏனென்றால், குற்றவாளிகள் யாரும் இப்படி அமைதியாகச் சிலுவையைச் சுமந்து நடந்து வரமாட்டார்கள். திட்டுவார்கள்; முரண்டு பிடிப்பார்கள். ஆனால், அன்பான இயேசுவோ மிகப்பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தார்.

இயேசுவுக்காக சீமோன் மனமிரங்கியதைக் கண்ட வீரர்கள் அவரைப் பிடித்தனர். சிலுவையைச் சுமக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினர். ஈட்டியின் பின் பக்கத்தை வைத்துச் சீமோனை இடித்தனர். 'வந்து இயேசுவின் சிலுவையைச்சுமந்துசெல்' என்று வலியுறுத்தினர்.

'அந்த மனிதர் இயேசுவா!' என்று ஆச்சரியமடைந்தார் சீமோன். ஏனெனில், இயேசுவைக் குறித்து அதிகம் கேள்விப் பட்டிருந்தார். எனவே, சந்தோஷமாக இயேசுவின் சிலுவையைச் சுமந்து சென்றார். பாரம் அழுத்தியது. ஆனாலும், இயேசுவின் மேல் உள்ள பாசத்தினாலே சிலுவையைச் சுமந்துசென்றார். இயேசுவுக்கு உதவ தனக்குக் கிடைக்கப் பெற்ற வாய்ப்பிற்காக மகிழ்ந்தார்.

இயேசுவின் கைகளில் ஆணிகள் அறையப்பட்டபோது



## செய்தி

**மற்றவரின் சுமையைக் குறைக்க நாம் அவர்களுக்கு உதவவேண்டும்.**

சீமோன் நிச்சயமாகவே பார்த்திருப்பார். சாகும் வரையிலும் தம்மைக் கொடுமைப்படுத்தியவர்களை மன்னிக்குமாறு பிதாவிடம் இயேசு ஜெபித்ததையும் சீமோன் நிச்சயமாகக் கேட்டிருப்பார். இயேசுவின் சொல்லாலும் செயலாலும் சீமோன் தொடப்பட்டிருப்பார்.

நிச்சயமாக சீமோன் மனம் மாறியிருப்பார். தன் வாழ்நாளின் இறுதிவரையிலும் இயேசுவை மிக நிச்சயமாகவே சீமோன் பின்பற்றியிருப்பார். இயேசுவோ இந்த உலகத்தின் பாவமெல்லாவற்றையும் சுமந்தார்.

தனக்காக உயிரைத்தந்த இயேசுவுக்காக சீமோன் சிலுவையைச் சுமந்தார்.

என் பிரியமே! எந்த விதத்தில் இயேசுவுக்கு நீ உதவப் போகிறாய்? இயேசுவுக்குப் பிரியமாக வாழ்வதையும் பிறருக்கு அன்புடனே உதவிசெய்வதையும் அவர் அதிகமாக விரும்புகிறார். உதவுவாயா?

### செய்முறை

*கிறிஸ்தவர்கள் செய்யவேண்டிய ஒரு முக்கியமான செயல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது; ஒவ்வொரு வரியிலும் இரண்டாவது எழுத்துகளை அடித்துவிட்டால் விடையைப் பெறலாம்.*



**பி த ற ல் ரு க டை ச ய**

____________________

**சு ர மை ப் க ட ளை த ச்**

____________________

**சு த ம ப் க் வ க ன**

____________________

**உ த் த ர வு.** __________